## அய்யா அவர்கள் எழுதிய தமிழ் நூல்கள்


1. கல்வி-சுவாமி விவேகானந்தர்
2. திருக்கேதார யாத்திரை
3. நான் கண்ட மகாத்மா
4. அடியார் பெருமை
5. வாழ்க்கைத் தத்துவம்
6. அன்பின் ஆற்றல்
7. சிந்தனைக் கதிர்கள்
8. அருளின் ஆற்றல்

*கிடைக்குமிடம் :*

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 43

அச்சிட்டோர் : விலை ரூ. 1-00
சாரதாலயா அச்சகம், கோவை-43

## அய்யா அவர்களின்
## (டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம்)



# அன்புக்குரல்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

— *திருக்குறள்*

அய்யா அவர்களின்
(டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம்)

# அன்புக்குரல்

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர்

UTE FOR HOME SCIENCE AND HIG
(DEEMED UNI

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.

— திருக்குறள்

அய்யா அவர்களின்

(டாக்டர் தி.சு. அவினாசிலிங்கம்)

# அன்புக்குரல்

அவினாசிலிங்கம் பல்கலைக்கழகம்

கோயமுத்தூர்

UTE FOR HOME SCIENCE AND HIGH
(DEEMED UNI

# முன்னுரை

உலகில் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு சமயங்களைச் சார்ந்த சமயச் சான்றோர்களும் மகாத்மாக்களும் ஆன்றவிந்தடங்கிய பேரறிவாளர்களும் தோன்றி உலக அமைதிக்காகவும் மக்களின் பண்பாட்டு உயர்வுக்காகவும், நலத்திற்காகவும் அரிய பெரும் கருத்துக்களைக் கூறி மக்களை விழிப்படையச் செய்துள்ளனர். ஆண்டவனிடம் அளவற்ற நம்பிக்கை கொள்ள வேண்டும் என்றும் உண்மையே பேச வேண்டும் என்றும் பொது நலத் தொண்டு செய்வதைக் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்றும், உயிர்களிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்றும், உழைப்பில் உயர்வு காணவேண்டும் என்றும் அறைகூவல் விடுத்துள்ளனர். அத்தகையோருள் ஒருவரான அமரர் அய்யா டாக்டர். தி.சு. அவினாசிலிங்கம் அவர்களின் அன்புக் குரலைத் தமிழ்

மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இவ்வெளியீட்டின் நோக்க மாகும்.

அமரர் அய்யா அவர்களின் நினை வாக, இந்த ஆண்டு அவர் பிறந்த நாளான மே மாதம் 5-ம் தேதி இச் சிறுநூல் வெளியிடப்படுகிறது. இந்நூல் எதிர்கால இந்தியாவை உருவாக்கும் இளைஞர்கள் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டியாக, வாழ்க்கைத் துணையாக அமையும் என நம்புகிறோம். எப்பொழுதும் தங்களுடனே வைத்துக் கொள்ளுவதற்குத் தகுந்தாற் போல் சிறு நூலாக அமைக்கப்பட்டிருக் கிறது. இந்நூலைப் படித்துப் பயன்பெற வாழ்த்துகிறோம். மேற்கொண்டு அவர் எழுதிய பல நூல்களைப் படித்து பயன் பெறவும் இது தூண்டுகோலாக இருக்கும் என்று நம்புகிறோம்.

இராசம்மாள் பா. தேவதாஸ்

சாரதாலயம் துணைவேந்தர்

5—5—1992

## தி. சு. அவினாசிலிங்கனாரின் அன்புக்குரல்

அன்பு என்பது மகத்தான சக்தி கொண்டது. விலை மதிக்க முடியாதது. எல்லாவற்றையும் விட அன்புதான் சிறந்தது.

அன்பிற்கு அடையாளம் 'இன் சொல்', முடிந்ததைச் செய்தல்'. எல்லோரும் நன்றாக இருக்க வேண்டுமானால் மற்றவர்களுடன் சேர்ந்து பிரியமாய் வாழ வேண் டும்.

அன்பு வடிவமான எந்த வேலை யும் இன்பத்தைத் தரவல்லது. அமைதியையும், மகிழ்ச்சியையும் தராத அன்புச் செயலே இல்லை.

இனிய வார்த்தைக்கு அடிப்படையாக இருப்பது அன்பு. அதற்கு எல்லையில்லாத சக்தி இருக்கிறது.

(தூய்மையான அன்பு எல்லையில்லா ஆற்றல் உடையது.) அது மனிதர்களை மட்டுமன்றி மிருகங்களைக் கூடப் பிணிக்கவல்லது.

எல்லோரிடத்திலும் அன்பு இருக்க வேண்டும். அன்பிற்கு ஓர் அளவு கிடையாது. நோய் வாய்ப்பட்டவன், அழுக்குச் சட்டை போட்டவன் என வித்தியாசமின்றி சேவை செய்வதே அன்பின் அடிப்படை.

எங்கே தியாகம், சேவை இருக்கின்றதோ, அங்கு எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றிகரமாக முடியும். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்க வேண்டியது அன்பு, நட்பு, சேவையுணர்வு ஆகியவைதான்.

சேவையின் இன்பத்தை ஒருவர் பெறவேண்டுமாயின் அவர் மக்களிடம் அன்பு கொள்ள வேண்டும். அதே சமயம் பலனை எதிர்பாராத பற்றின்மையும் அவரிடம் இருக்க வேண்டும். இத்தகைய கர்மயோகி மிகுந்த மகிழ்ச்சியையும் உயர்ந்த ஆன்மீக அனுபவத்தையும் பெற இயலும்.

உயர்ந்த இலட்சியத்தில் ஈடுபடுவதே ஒழுக்கத்தின் அறிகுறியாகும்.

ஆண்மை, வீரம், பரிசுத்தம், நல்லொழுக்கம், அன்பு, சேவை முதலிய கருத்துக்கள் மனித இனத்திற்கே அடிப்படையான இலட்சியமாயிருப்பவை. எல்லாத் தொழில்களிலும் நிலைகளிலும் இருக்கும் மக்களுக்கு இவை பொருந்தும்.

இலட்சிய வாழ்வுக்குப் பெரிது பணமல்ல, அதிகாரமல்ல, சேவைதான் பெரிது; தூய்மைதான் பெரிது; கடமையைச் செவ்வனே செய்வதுதான் பெரிது.

ஆத்மீக லட்சியங்களை ஏற்று, அவைகளை வாழ்க்கை முழுவதும் பின்பற்றி வாழ்வதே யாவற்றினும் உயர்ந்தது.

மனத்தைத் தாழ்ந்த கருத்துக்களில் செல்லவிடாமல் உயர்ந்ததொரு லட்சியத்தில் செலுத்துவது உயர்ந்த ஆண்மையாகும்.

எல்லையற்ற பலம், நம்பிக்கை, சக்தி, அனைவரிடத்தும் அன்பு, எளிமை, வினயம், ஆண்டவனிடமும் தேசத்திடமும் பக்தி, தியாக புத்தி, சேவை உணர்ச்சி, சகோதரத்துவம் - இவைகளே நம் குழந்தைகளின் இலட்சியமாய் இருக்க வேண்டும்.

உண்மை உழைப்புக்கு அடிப்படையாக இருப்பது ஊக்கம். ஊக்கம் இல்லாத உழைப்பு பரிணமிக்காது. ஏற்ற பயனையும் தராது.

தங்கள் வேலையில் ஊக்கம் இருப்பவர்களுக்கு மனத்தில் மகிழ்ச்சி இருக்கும். அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவார்கள்.

எதிர்காலத்தில் நம் நாடு எல்லா விதங்களிலும் சிறப்புற்று விளங்க வேண்டும் என்கிற வேட்கை நம் மனத்தில் நிறைந்திருக்க வேண்டும். அந்த வேட்கையை நிறைவு செய்ய வேண்டுமானால் நம் மனத்தில் தளராத ஊக்கத்தையும் சலியா உழைப்பையும் ஆற்றலையும் நாம் பெறவேண்டும்.

மனித வாழ்க்கையில் அனைத்திலும் முக்கியமானது ஊக்கம். அது செல்வம், செல்வாக்கு, கல்வி முதலிய அனைத்தையும் அளிக்க வல்லது.

செல்வமும், அதிகாரமும் ஒருவனிடம் இருந்து அவனிடம் ஊக்கமும், உழைப்பும் இல்லாமற் போனால் அவன் அரும்பெரும் காரியங்களைச் செய்யச் சக்தியற்றவனாக இருப்பான். ஆதலால், எல்லாத் துறைகளிலும் மகத்தான காரியங்களைச் செய்வதற்கு உழைப்பு அவசியம்.

வாழ்க்கையில் சக்தி உள்ளவர்களாகவும், செல்வாக்கு உள்ளவர்களாகவும், ஆற்றல் படைத்தவர்களாகவும் இருப்பவர்களுக்கு அடிப்படையாக இருப்பது ஒழுக்கமும் உழைப்புமேயாகும்.

ஒழுக்கமே மனிதனுடைய உயர்ந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக இருக்கிறது.

எவரும் தமக்கு இருக்கும் குறைகளை நினைந்து வருந்திக் கொண்டிருக்க வேண்டாம். அறிவோடு கூடிய இடைவிடாத முயற்சியே அனைத்தையும் தரக்கூடியது.

நன்கு நெறிப்படுத்தப்பட்ட தொடர்ந்த முயற்சியால் சடப் பொருள்களின் சக்தியை உண்டாக்குவது போன்றே நன்கு திட்டமிட்ட - நிலையான - இடையறாத முயற்சியால் ஆன்மீக அன்பு ஆற்றலை உருவாக்கலாம்.

சரியான வழியைத் தெரிந்து கொள்ளுவதும், அந்த வழியில் இடைவிடா முயற்சியும் காரியங்களை வெற்றிகரமாக முடிப்பதற்கு மிக அவசியம்.

யாரொருவர் தங்கள் மனத்தில் நிறைந்த தன்னம்பிக்கையையும் அதனால் நிறைந்த முயற்சியையும் ஊக்கத்தையும் பெற்றிருக்கிறார்களோ, அவர்களுக்குத் தோல்வி என்பதே இல்லை.

அறிவு இல்லாதவர்கள் சொல்லும் வார்த்தைகளைக் கூடப் பொறுத்துக் கொள்ளும் வன்மை தான், சக்திக்கு எல்லாம் பெரிய சக்தி.

எது மனிதனுக்குப் பலத்தையும் சக்தியையும் ஆற்றலையும் கொடுக்கிறதோ, அது தான் ஒருவனுக்கு நல்லது.

(1) நல்ல பழக்கங்களும், கட்டுப்பாடான வாழ்க்கையும், தூய்மையுமே சகலவிதமான சக்திகளுக்கும் அடிப்படை.

(2) ஆழ்ந்த அன்பிலும் எளியோர்க்கு இரங்குவதிலும், வறியவர்களுக்காகத் தன்னலத்தை மறந்து உழைப்பதிலுமே பக்தியின் உண்மை விளங்கும்.

(3) இவ்வுடலும் இப்புலன்களும் நல்ல காரியங்களுக்குப் பயன் படுத்துதற்காக ஈசுவரனால் கொடுக்கப்பட்ட கருவிகளே. மனிதனே அவற்றைத் துன்மார்க்கத்திலும், சன்மார்க்கத்திலும் ஈடுபட வைக்கிறான். சன்மார்க்கத்தில் ஈடுபடில் அவை அவனுக்கு நன்மையைப் பயக்கின்றன.

வெறும் உடல் பலம் மாத்திரம் இந்திய மக்களின் இலட்சியமாயிருக்க முடியாது. அத்துடன் ஆன்மீக பலமும் சேர்ந்திருக்க வேண்டும். தங்களிடம் இருக்கும் சக்தியை அவர்கள் தங்களுக்கெனப் பயன்படுத்திக் கொள்ளாமல், மன்னுயிரைத் தன்னுயிர் போல் நினைத்து, அவர்களுக்காகத் தமது உடைமை அனைத்தையும் தியாகம் செய்ய முன்வர வேண்டும்.

உலகத்தில் இருக்கும் மக்களை நடமாடும் தெய்வங்களாகப் பாவித்து அவர்களுக்கு அன்புடனும், ஆர்வத்துடனும் சேவை செய்ய முன் வருபவர்களே சிறந்த பக்திமான்களென்று போற்றத் தக்கவர்கள்.

உள்ளத்திலே அன்பும் சுயநல மற்ற சேவையும் இல்லாத இடத்திலே தெய்வபக்தி இல்லை என்று சொல்லலாம்.

ஒவ்வொரு மனிதனும் வலிமையுடனும், ஆண்மையுடனும் வளர்வதற்கு நம்பிக்கையும், பக்தியும் அவசியம். தூய்மையான வாழ்க்கையும், தியாகமும் நல்வாழ்வின் இன்றியமையாத் தேவைகளாகும்.

சுயநல ஆசை நிறைந்த மனிதனிடத்தில் தெய்வபக்தி இருக்க முடியாது.

மாசற்ற, தூய்மை நிறைந்த வாழ்வே பக்தியின் அடையாளம்.

தெய்வபக்தி என்பது வெறும் குறிப்புக்களிலும் அர்த்தமற்ற பழக்க வழக்கங்களிலும் இல்லை. ஆழ்ந்த அன்பிலும், எளியோருக்கு இரங்குவதிலும், வறியவருக்காகத் தன்னலத்தை மறந்து உழைப்பதிலுமே பக்தியின் உண்மை விளங்கும்.

பிரார்த்தனை அன்பை உண்டாக்குகிறது. அன்பினால் உந்தப்பட்டு வாழ்க்கை நடத்தினால் மகிழ்ச்சி கிடைக்கும்.

கல்வியின் நோக்கம் தனிமனிதர்களை உருவாக்குவது மட்டுமன்று; சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் வாழும் ஆண்களையும் பெண்களையும் உருவாக்குவதும் ஆகும்.

பதவி, அதிகாரம், பணம், கல்வித்தகுதி ஆகியவற்றைக் கொண்டு ஒருவருடைய பெருமையை நாம் எடை போடக் கூடாது. மாறாக, நேர்மை, பக்தி ஆகியவையே ஒருவருடைய பெருமைக்கு அடிப்படைகளாகும்.

செல்வத்தோடு உழைப்பும் இல்லாவிட்டால் ஒருவன் அச்செல்வத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியாது. கல்வி இருந்து உழைப்பு இல்லாவிட்டால் அவன் அந்தக் கல்வியின் பயனை அடைய முடியாது.

தனிமனிதனின் தூய வாழ்க்கைக்குக் கல்வி உதவ வேண்டும். கல்வியில் சமயப் பயிற்சியும் சிறப்பிடம் பெறவேண்டும்.

குழந்தையின் இயல்புகளுக்கும் அதன் நல்லுணர்ச்சிகளுக்கும் மதிப்புக் கொடுத்தல் அவர்களை நன்றாக வளர்ப்பதற்கு இன்றியமையாத தன்மையாகும்.

குழந்தைகள் மனத்தில் அளவற்ற தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும். எக்காரியத்தையும் செய்து முடிக்கக்கூடிய திறமையும் ஆற்றலும் தங்களிடம் இருக்கிற தென்ற நம்பிக்கையை இளமையிலிருந்தே அவர்களுக்கு ஊட்ட வேண்டும்.

தன்னம்பிக்கை இருந்தாலொழிய ஒருவன் எக்காரியத்தையும் செய்ய முடியாது.

வாழ்க்கையில் வெற்றிக்குத் தன்னம்பிக்கையும் மன உறுதியும் மிகவும் அவசியம்.

மகத்தான காரியங்களைச் சாதிப்பதற்கு மனதைச் செலுத்திப் பிரியத்தோடு, அன்போடு, பக்தியோடு, ஆர்வத்தோடு செய்யக் கூடிய தைரியம் வேண்டும்.

தைரியம் இல்லாமல் நிதானம் வராது. நிதானம் இல்லாதவர்களுக்கு மனத்தில் தெளிவு இராது.

தைரியமும் நிதானமும் இன்றி எவரும் அரும்பெரும் காரியங்களைச் சாதிக்க முடியாது.

நமது நாட்டில் எதிர்காலத்திலே ஒரு மகத்தான சக்தி வாய்ந்த ஒரு சமுதாயத்தை உண்டாக்க வேண்டுமானால், நம் குழந்தைகள் பயமற்றவர்களாக, தைரியமும் தன்னம்பிக்கையும் நிறைந்தவர்களாக வளரவேண்டும்.

நம் குழந்தைகளை எதற்கும் அஞ்சாத் தைரியத்துடனும், ஆண்மையுடனும் வளர்க்க வேண்டுமென்ற ஆர்வம் நமது மனத்தில் நிறைந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

தன்னலமின்றிச் செய்யப்படும் எல்லாச் செயல்களும், கடமைகளும் புனிதமானவை. எனவே, செய்யும் தொழிலே தெய்வமாகும்.

நாம் மேற்கொண்ட துறைகளில் சிரத்தையுடன் ஈடுபட்டு, ஊக்கத்துடன் மனமார வேலை செய்வதே நாம் நம் நாட்டுக்காகச் செய்யக் கூடிய பெரும் சேவையாகும்.

எதிர்காலத்தில் நம் மக்கள் வீரர்களாய், ஆண்மையுள்ளவர்களாய், அன்பும் ஒற்றுமையும் உள்ளவர்களாய், மகத்தான காரியங்களைச் செய்யும் சக்தியுள்ளவர்களாய் விளங்க வேண்டுமானால், அது பெரும்பாலும் அவர்கள் குழந்தைப் பருவ அனுபவத்தையும், பயிற்சியையும் பொறுத்திருக்கிறது. இத்தகைய பழக்கத்தையும் பயிற்சியையும் அளிப்பதே நம் பெற்றோர்கள் தங்கள் தாய் நாட்டிற்குச் செய்யக் கூடிய அரிய சேவையாகும்.

எல்லோரும் நாம் மேற்கொண்ட துறைகளில் சிரத்தையுடன் ஈடுபட்டு, ஊக்கத்துடன் மனமார வேலை செய்வோமானால் அதுவே நாம் நம் நாட்டுக்காகச் செய்யக்கூடிய பெரும் சேவையாகும்.

பல திறப்பட்ட மக்களின் தன்மையையும் நிலையையும் அறிந்து அவர்கள் தன்மைக்கும் நிலைக்கும் ஏற்றவாறு அவர்களிடம் பழக வேண்டும்.

எந்த நிலையில் இருந்தபோதிலும், தங்கள் வேலையில் ஊக்கம் இருப்பவர்களுக்கு மனத்தில் மகிழ்ச்சி இருக்கும். அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவார்கள். அவர்கள் வாழ்க்கையே இன்பமாக இருக்கும். அத்தகையவர்கள் தாம் பெரிய காரியங்களைச் சாதிக்கும் சக்தியைப் பெறுவார்கள். மற்றவர்களுக்கும் அவர்களிடத்தில் நம்பிக்கை உண்டாகும்.

INSTITUTE FOR HOME SCIENCE AND HIGHER EDU...
(DEEMED UNIVERSITY)
LIBRARY

## அய்யா அவர்கள் எழுதிய ஆங்கில நூல்கள்

1. Education - Swami Vivekananda
2. Vivekananda and Gandhi
3. Gandhi's Experiments in Education
4. Understanding Basic Education
5. Utilising Festivals in Education
6. Education for National Integration
7. Educational Philosophy of Swami Vivekananda
8. Cultural Heritage of India
9. The Sacred Touch
10. Make Me a Man
11. Thoughts of Strength